

புனித
மத்தேயு
நற்செய்தி
விண்ணரசின் திறவுகோல்
மத்தேயு
நற்செய்தி
அ.அல்போன்ஸ்
திருச்சி
அன்பின் மடல்

# புனித மத்தேயு நற்செய்தி

## விண்ணரசின் திறவுகோல்

**அ.அல்போன்ஸ் திருச்சி**

புனித மத்தேயு நற்செய்தி
வாக்குறுதியிலிருந்து நிறைவேற்றத்திற்கும்,
குழந்தைப் பிறப்பிலிருந்து சிலுவைத் தியாகத்திற்கும்,
விண்ணரசிலிருந்து இறுதித் தீர்ப்பிற்கும்
பயணிக்கும் கிறிஸ்துவின் இறையியல் காவியம் ஆகும்.

மத்தேயு, இயேசுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவத்தையும் பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகளோடு இணைத்து, ‘‘இது இறைவாக்கினர் வழியாகச் சொல்லப்பட்டது நிறைவேறும்படி நிகழ்ந்தது’’ என்ற நிறைவேற்ற இறையியலைத் தொடர்ந்து வெளிப்படுத்துகிறார்

நற்செய்தியின் மையத்தில் அன்பு, மன்னிப்பு, இரக்கம், நீதி, விழிப்புணர்வு மற்றும் செயல்மிக்க விசுவாசம் ஆகியவை நிற்கின்றன. குறிப்பாக இறுதித் தீர்ப்பில், பசியுற்றோர், நோயுற்றோர், சிறையில் இருப்போர், அந்நியர்கள் ஆகியோரில் கிறிஸ்துவையே காண வேண்டும் என்று கூறுவதன் மூலம், மனிதனை நேசிப்பதே கிறிஸ்துவை நேசிப்பதாகும் என்ற ஆழமான இறையியலை வெளிப்படுத்துகிறார். எனவே, மத்தேயு மட்டும் பதிவு செய்யும் இந்த நிகழ்வுகள் அனைத்தும் தனித்தனி சம்பவங்களாக இல்லாமல், இயேசு யார், அவர் ஏன் வந்தார், விண்ணரசு எப்படிப்பட்டது, உண்மையான சீடத்துவம் எவ்வாறு வாழப்பட வேண்டும், இறுதியில் மனித வாழ்க்கை எதனால் அளவிடப்படும் என்பதற்கான ஒருங்கிணைந்த இறையியல் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

## மத்தேயுவின் தனிச்சிறப்பான பதிவுகள்

மற்ற மூன்று நற்செய்திகளில் இல்லாமல், மத்தேயு மட்டும் பதிவு செய்யும் முக்கிய நிகழ்வுகள் மற்றும் உவமைகள்

## இயேசுவின் பிறப்பு மற்றும் ஆரம்ப வாழ்க்கையில்

1. கிழக்கிலிருந்து ஞானிகள் வருகை (மத் 2:1–12) பிற இன ஞானிகள் குழந்தை இயேசுவைத் தேடி வந்து வணங்கினர். இயேசு யூதர்களுக்கே அல்ல, உலகமெங்கும் மீட்பர் என்பதைக் காட்டுகிறது.

2. பொன், குங்குமப்பூ, வெள்ளைப்போளம் காணிக்கை அரசன், இறைமகன், தியாகமரணம் அடைவோர் என்ற மூன்று அடையாளங்கள் வெளிப்படுகின்றன. குழந்தையிலேயே கிறிஸ்துவின் முழு மீட்புப் பணி சுட்டிக்காட்டப்படுகிறது.

3. ஏரோது கொல்ல அனுப்பிய வீரர்களிடமிருந்து எகிப்துக்குத் தப்பிச் செல்லுதல் (மத் 2:13–15)

## இயேசுவின் பணிவாழ்வு

பாறையின் மேல் வீடு (மத் 7:24–27), ‘‘என் திருச்சபையைக் கட்டுவேன்’’ (மத் 16:18) விண்ணரசின் திறவுகோல்கள் (மத் 16:19) கோயில் வரிக்கான மீன் நாணயம், பேதுருவுக்கு பொறுப்பும் பணியும் வழங்கப்படுகிறது போன்றவை மத்தேயுவின் இணையில்லா புதிய காட்சிகள்

## மத்தேயுவுக்கே உரிய உவமைகள்

1. நன்மையும் தீமையும் களைகள் மற்றும் கோதுமை அறுவடைவரை ஒன்றாக வளரும். (மத் 13:24–30) அறுவடை வரும் வரை காத்திருக்க சொன்னார்

2. மறைந்த புதையல் (மத் 13:44) விலைமதிப்புள்ள முத்து (மத் 13:45–46) விண்ணரசைக் கண்டவன் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் விட்டுவிடுகிறான்.

3. வலை உவமை (மத் 13:47–50) பலவகை மீன்கள் இறுதியில் பிரிக்கப்படுகின்றன. வரலாற்றின் முடிவில் இறைநீதி நிறைவேறும் என்பதாகும்.

4. இரக்கமற்ற பணியாளர் (மத் 18:23–35) பெற்ற மன்னிப்பை பிறருக்கு வழங்காதவன் கண்டிக்கப்படுகிறான்.

6. திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள் (மத் 20:1–16) வெவ்வேறு நேரங்களில் வந்தவர்களுக்கும் ஒரே கூலி கிடைக்கிறது. இறைவனின் அருள் மனிதக் கணக்கை மீறுகிறது.

7. இரண்டு மகன்கள் (மத் 21:28–32) சொன்னவன் செய்யவில்லை; மறுத்தவன் பின்னர் செய்தான். வார்த்தையைவிட செயலில் வெளிப்படும் கீழ்ப்படிதல் உயர்ந்தது.

8. திருமண விருந்து (மத் 22:1–14) அழைக்கப்பட்டோர் மறுத்தபோது மற்றவர்கள் அழைக்கப்படுகின்றனர். இறையரசின் அழைப்பு அனைவருக்கும் திறந்தது என்பதை அறிவிக்கிறது.

9. இறுதிக்கால சீடத்துவம் விழிப்பும் ஆயத்தமும் வேண்டும் என்பதைக் காட்ட பத்து கன்னியர் (மத் 25:1–13) மணமகனுக்காக எண்ணெயுடன் விழித்திருந்தவர்கள்.

10. அருட்கொடைகளைப் பயன்படுத்தியவர்கள் பாராட்டத் தாலந்து உவமை (மத் 25:14–30) தந்தார்

11. ஆடுகளும் வெள்ளாடுகளும் (மத் 25:31–46) துன்புறும் மனிதரில் கிறிஸ்துவைக் கண்டவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

## *இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம்*

1. யூதாஸ் வெள்ளிக்காசுகளைத் திருப்புதல் (மத் 27:3–10) துரோகத்தின் பாரம்

2. பிலாத்துவின் மனைவியின் கனவு (மத் 27:19) ஒரு புறஜாதிப் பெண் இயேசுவின் நீதியை உணர்கிறாள்.

3. பிலாத்து கைகளைக் கழுவுதல் (மத் 27:24) தண்ணீரால் கைகளைச் சுத்தப்படுத்தினாலும் பொறுப்பு நீங்கவில்லை

4. கல்லறைக்குக் காவல் வைக்கப்பட்டது (மத் 27:62–66)
காவலர்களுக்குப் பணம் கொடுத்துப் பொய்யைப் பரப்புதல் (மத் 28:11–15)
மனித அதிகாரம் உயிர்த்தெழுதலைத் தடுக்க முயன்றது.

## *மத்தேயு வரைந்த காவியம் — முரண்பாடுகளின் வழியே வெளிப்படும் கிறிஸ்து*

மத்தேயு நற்செய்தியில் மட்டும் காணக்கூடிய மிக ஆழமான இலக்கிய–இறையியல் தனிச்சிறப்புகளில் ஒன்று, முரண்பாடுகளை ஒன்றோடொன்று எதிரெதிராக நிறுத்தி, அதன் வழியாக இயேசுவின் உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்துவது ஆகும்.

மத்தேயுவில் சில நிகழ்வுகள் வெளிப்படையாக ஒன்றுக்கொன்று எதிர்மாறாகத் தோன்றினாலும், அவற்றின் உள்ளே விண்ணரசின் ஆழமான தர்க்கம் மறைந்திருக்கிறது.

1. தொலைதூர கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் குழந்தை இயேசுவைத் தேடி வந்து வணங்குகின்றனர்; ஆனால் எருசலேமின் அரசனான ஏரோது அவரைக் கொல்லத் தேடுகிறான். இதுவே மத்தேயுவின் முதல் பெரிய முரண்பாடு.

2. அதேபோல், இயேசு அரசனாகப் பிறந்தாலும் அரண்மனையில் அல்ல, எளிய இல்லத்தில் காணப்படுகிறார்; உலக அரசன் ஆயுதத்தோடு அல்ல, தாழ்மையின் அடையாளமான கழுதையின் மேல் எருசலேமுக்குள் நுழைகிறார்.

3. மலைப்பொழிவில் இயேசு ‘‘ஆவியில் ஏழைகள் பேறுபெற்றோர்’’ என்று அறிவிக்கிறார்; உலகம் செல்வத்தையும் அதிகாரத்தையும் ஆசீர்வாதமாகக் கருதும் வேளையில், கிறிஸ்து ஏழ்மையையே விண்ணரசின் வாசலாக மாற்றுகிறார். ‘‘முதலானோர் பலர் கடைசியாவர்; கடைசியானோர் முதலாவர்’’ என்ற அவரது வார்த்தை, உலகின் பதவி வரிசையைத் தலைகீழாக்குகிறது.

4. திராட்சைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரே கூலி வழங்கப்படுவது, மனிதனின் கணக்கையும் இறைவனின் அருளையும் எதிரெதிராக நிறுத்துகிறது; மனிதன் ‘‘நான் அதிகம் செய்தேன்’’ என்று உரிமை கோரும்போது, இறைவன் ‘‘அருள் உன் தகுதியின் கணக்கை மீறுகிறது’’ என்று அறிவிக்கிறார்.

5. இரண்டு மகன்களின் உவமையில் ‘‘ஆம்’’ என்று சொன்னவன் செல்லவில்லை; ‘‘இல்லை’’ என்று சொன்னவன் பின்னர் சென்றான்; இதன் மூலம் வாயின் விசுவாசத்தைவிட வாழ்க்கையின் கீழ்ப்படிதல் உயர்ந்தது என்பதை மத்தேயு காட்டுகிறார்.

6. திருமண விருந்தில் அழைக்கப்பட்டவர்கள் வர மறுக்க, தெருவோரத்தினர் அழைக்கப்படுகிறார்கள்; இதனால் மத அடையாளத்தைவிட அழைப்பை ஏற்றுக்கொள்ளும் இதயமே விண்ணரசில் முக்கியமானது என்ற உண்மை வெளிப்படுகிறது.

7. மத்தேயுவின் முரண்பாடுகள் இயேசுவின் இறுதி நாட்களில் இன்னும் கூர்மையாகின்றன. நீதியை நிலைநாட்ட வேண்டிய ஆளுநர் பிலாத்து இயேசு  குற்றமற்றவர் என்று தெரிந்தும், நீதியைச் செய்யத் தயங்குகிறார்; ஆனால் அவனுடைய மனைவி கனவில் இயேசுவை ‘‘நீதிமான்’’ என்று உணர்கிறாள் (மத் 27:19). அதிகாரத்தில் இருப்பவன் உண்மையிலிருந்து பின்வாங்குகிறான்; அதிகாரத்திற்கு வெளியே இருக்கும் ஒரு பெண்ணின் மனச்சாட்சி உண்மையைத் தொடுகிறது.

8. இயேசுவை அரசனாக ஏற்க மறுத்தவர்கள் அவரது தலையின் மேல் ‘‘யூதர்களின் அரசன்’’ என்ற குற்றச்சாட்டை எழுதுகிறார்கள்; மனிதன் அவமதிப்பாக எழுதிய வார்த்தை, அறியாமலேயே அவரது உண்மையான அரசத்துவத்தின் அறிவிப்பாக மாறுகிறது

9. தலைமைக்குருக்கள் இயேசுவைச் சிலுவையில் அறையச் செய்கிறார்கள்; பின்னர் அவரது கல்லறையைப் பாதுகாக்க காவலர்களை வைக்கிறார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலைத் தடுக்க கல்லை முத்திரையிடுகின்றனர். ஆனால் மனிதன் கல்லால் மூட முயன்றதை இறைவன் உயிரால் திறக்கிறார். கல்லறையை மூடிய அதிகாரம் உயிர்த்தெழுதலின் முன் தோல்வியடைகிறது; காவலர்களின் மௌனத்துக்கு எதிராகத் தேவதூதரின் அறிவிப்பு ஒலிக்கிறது. இவ்வாறு மத்தேயு உருவாக்கும் முரண்பாடு மிகவும் ஆழமானது:

இதனால் மத்தேயு வரைந்தது உலகத்தின் மதிப்பீடுகளையும் இறைவனின் மதிப்பீடுகளையும் எதிரெதிராக நிறுத்தி, சிலுவையின் முரண்பாட்டில் கிறிஸ்துவின் உண்மையான மகிமையை வெளிப்படுத்தும் இறையியல் காவியம் ஆகும்.

இறுதியில், உலகம் அவரைத் தள்ளிவிட்டாலும், அவர் உலகத்தைத் தள்ளுவதில்லை; மாறாக ‘‘உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’’ என்று கூறுகிறார். இதுவே மத்தேயுவின் மிகப்பெரிய முரண்பாடு: மனிதன் கிறிஸ்துவை நிராகரித்த இடத்திலேயே கிறிஸ்து மனிதனை மீட்கிறார்; மனிதன் அவரைத் தனிமைப்படுத்திய சிலுவையிலேயே அவர் மனிதகுலத்தோடு என்றும் இருப்பதற்கான வழியைத் திறக்கிறார்.

*இம்மானுவேல் — கடவுள் நம்மோடு*’’ என்ற தொடக்க இறையியல் உண்மை (மத் 1:23) நற்செய்தியின் இறுதியில் ‘‘உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’’ (மத் 28:20) என்ற இயேசுவின் வாக்குறுதியாக நிறைவடைகிறது. எனவே மத்தேயுவின்

நற்செய்தி ''கடவுள் நம்மோடு'' என்ற இறையியல் வட்டத்தை உருவாக்குகிறது: கருவறையில் நம்மோடு வந்தவர், மனித வாழ்க்கையில் நம்மோடு நடந்தவர், சிலுவையில் நம்மோடு துன்புற்றவர், உயிர்த்தெழுதலில் மரணத்தை வென்றவர், திருச்சபையின் பணியில் தொடர்ந்து நம்மோடு இருப்பவர்.

## ''இம்மானுவேலிலிருந்து இறுதித் தீர்ப்புவரை மத்தேயு வரைந்த நற்செய்தி கிறிஸ்துவின் காவியம்''

